
## திராவிடத்தால் வாழ்கிறோம்


1291

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்




## சத்தமில்லாமல் சூழ்ந்துவரும் ஆபத்து!

தமிழ்நாட்டின் ஆட்சி மாற்றம் 100 நாட்களைத் தொட்டுள்ள நிலையில், நிர்வாகத் திறனற்ற ஆட்சியைப் பலரும், பல வகைகளில் சமூக வலைதளங்களில் விமர்சித்துவருகின்றனர். சமூக செயல்பாட்டாளர் பாரத் தமிழ் என்பவர், விஜய் பெயரால் புதுப்புதுக் குற்றவாளிகள் பெருகிக்கொண்டிருக்கின்றனர் எனத் தனது பார்வையை முகநூலில் பகிர்ந்துள்ளார். அவரது பதிவிலிருந்து...

"த.வெ.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து, ஒன்றைத் தொடர்ந்து கவனிக்கிறேன். பல குற்றங்களில் த.வெ.க.வினர்தான் குற்றவாளிகள். அதாவது, ஆட்சி நம்முடையது என்கிற நினைப்பில், புதுப்புதுக் குற்றவாளிகள் தோன்றி இருக்கிறார்கள். அதேபோல், 'நமது அண்ணன் ஆட்சிதானே' என்று தவறுகளைத் தட்டிக்கேட்கப் பல சிறுவர்களும் இளைஞர்களும் முன்வந்து, தங்களையும் நாயகப் பிம்பத்திற்குள் பொருத்திக்கொள்ளத் துடிக்கிறார்கள். சக நடிகனின் ஆட்சி என்று எல்லா நடிகர்களும் எதன் பொருட்டோ, விஜய்க்குத் தினமும் விளம்பரதாரர்களாக மாறி, இன்னும் பிரம்மாண்டமாகக் காட்டுகிறார்கள்.

முன்னணி தொலைக்காட்சி சேனல்களை விஜய் விலைக்கு வாங்கிவிட்டாரா என்று தெரியவில்லை. ஆனால், பல 'ஜாம்பவான்களின் வாய்களை' விலைக்கு வாங்கிவிட்டார். பொய்களையும் வன்மங்களையும் பரப்பி ஆட்சிக்கு வந்தவர்கள், கொஞ்சம்கூட கூச்சம் இல்லாமல், சட்டசபையில்கூட பொய் பேசுகிறார்கள். இந்த ஆட்சியின் அவலங்களைக் கேட்க, தி.மு.க., அ.தி.மு.க. வைத் தவிர, வேறு எதிர்க்கட்சிகளே இல்லை என்கிற அளவுக்கு எல்லாரும் ஆட்சியின் அங்கமாக மாறி இருக்கிறார்கள். இன்னொருப் பக்கம் த.வெ.க.வின் தவறுகளைப் பொறுத்துக் கொள்ள, தமிழ்நாடு பழகிவருகின்றது. பழகாதவர்களைப் பழிக்கிறது; கடிக்கிறது; பட்டங்கள் தந்து மிரட்டுகிறது. கருத்துச் சுதந்திரத்திற்குச் சத்தமே இல்லாமல் ஒரு ஆபத்து சூழ்ந்திருக்கிறது. அதுவும் கருத்தியல் பேசிவந்த கூட்டத்தினரால்" என்று தனது ஆதங்கத்தைப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்

### முதல் வாய்ப்பும் தலைவர் வாழ்த்தும்...



1996-ஆம் ஆண்டில், நான் திருவாரூர் நகர மாணவர் அணி துணை அமைப்பாளராக, அன்றைய மாணவர் அணி அமைப்பாளர் அண்ணன் திருச்சி சிவா எம்.பி., அவர்களால் நியமிக்கப்பட்டேன். அப்போது, திருவாரூரில் நிகழ்ச்சிக்காக வருகைதந்த, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள், சந்நிதித் தெருவில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சகோதரியார் இல்லத்தில் தங்கியிருந்தார். அதையடுத்து, அவரிடம் வாழ்த்துப் பெற, அண்ணன் கு.தெ.முத்து அவர்கள் அழைத்துச்சென்று, அறிமுகம் செய்து வைத்தார். நான் தளபதி அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்து, வாழ்த்துப் பெற்றேன். எனக்குக் கிடைத்த முதல் வாய்ப்பில், தலைவரை சந்தித்தது மகிழ்ச்சியாக இருந்தது.



பா.தமிழரசன்

**– பா.தமிழரசன், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் பொருளாளர், இயக்குநர் – கலைஞர் நூலகம் அறக்கட்டளை, திருவாரூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் உருக

### நாட்டு மக்களின் நம்பிக்கை!

1956-மே மாதம், திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாடு, தேர்தல் சிறப்பு மாநாடாக நடைபெற்றபோது, தேர்தலில் கலந்துகொள்வது குறித்து, பேரறிஞர் அண்ணா நீண்ட உரை நிகழ்த்தினார். உரையில் "நம்மை ஏசியவர்கள் தொகை ஏராளம்! அவர்கள் பயன்படுத்திய தமிழ்ச்சொற்கள், தமிழ் அகராதிகளிலும் இருக்க லாயக்கற்றவை! அப்படிப்பட்ட ஏச்சுப்பேச்சுக்களை எல்லாம் தாங்கிக்கொண்டு, நாம் முன்னேறி வந்திருக்கிறோம் என்றால், நம்முடைய குறிக்கோளில் நமக்கு இருக்கிற நம்பிக்கையும், அந்தக் குறிக்கோளை நாம் வெற்றிகரமாக முடித்துக் காட்டுவோம் என்பதில், நமக்குள்ள நம்பிக்கையும், நாட்டு மக்கள் நமக்குப் பேராதரவு அளிப்பார்கள் என்ற பெரு நம்பிக்கையும்தான் அதற்குக் காரணம்" என்று குறிப்பிட்டிருப்பார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900